சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO. 281 / 2014

மனுதாரர் / எதிர்மனுதாரர் ம.சா.2 வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திரு.முத்து அவர்களால் 44/1969 பிரிவின்படி 22.09.2022 ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் : ரவி | கிராமம் : |
| த/பெ : கணேசன் | வட்டம் : |
| மதம் : | தொழில் : |
| ஜாதி : | வயது : |

முதல் விசாரணை

நான் திருச்சி மாநகர தெற்கு போக்குவரத்து புலனாய்வு பிரிவில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். இந்த நீதிமன்றத்தில் இருந்து எங்கள் நிலையஉதவி ஆய்வாளருக்கு சாட்சி சொல்ல சம்மன் வந்ததின் பேரில் அவரது வாய்மொழி உத்தரவின் பேரில் நான் இன்று சாட்சி சொல்ல ஆஜராகி உள்ளேன். எங்கள் காவல் நிலையத்தில் குற்ற எண். 30/2013 இ.த.ச. பிரிவுகள் 279, 337, 338, 304 A படி ஆனந்தராஜ் என்பவர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால்சரிதான். மேற்படி குற்ற எண்ணில் புலன்விசாரணை மேற்கொள்ளப்பட்டு மேற்படி ஆனந்தராஜ் மீது திருச்சி குற்றவியல் நடுவர் நீதிமன்ற எண்.5 ல் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால்சரிதான். முதல் தகவல் அறிக்கை மற்றும் இறுதி அறிக்கையில் குமார் மற்றும் அவரது மனைவி அகிலாம்பாள் ஆகியோர் விபத்தில் காயம் அடைந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்சரிதான். மேற்படி நபர்களின் காயச்சான்று உள்ளதா என்றால் எங்கள் நிலைய கோப்பில் இல்லை. குற்ற இறுதி அறிக்கை உண்மைநகல் தாக்ல செய்கிறேன் அது சா.சா.ஆ.1. மேற்படி குற்ற எண் சம்பந்தமான கோப்புகளை கொண்டு வந்துள்ளேன் அதில் விபத்தில் காயமடைந்த இரண்டு நபர்களின் காயச்சான்றிதழ் இல்லை.

எனது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை

இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாரணை மேற்கொண்டது நான் இல்லை ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம்

அளிக்கிறேன். குற்ற எண். 30/2013 சம்பந்தமான குற்ற வழக்கு குற்றவியல் நீதிமன்றத்தில் தீர்ப்பு பகரப்பட்டுள்ளது. எதிரி மீது எந்த குற்றமும் இல்லை என்பதால் தான் எதிரி குற்றவியல் நீதிமன்றத்தில் விடுதலை செய்யப்ப்டடார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

ஒம் / ரவி

ஒம்/ சண்முக கனி,
சார்பு நீதிபதி,
குளித்தலை.